விவேகானந்தர் கல்விக் கழக வெளியீடு ௩.

# தனவணிகர் முன்னேற்றம்.

இஃது,
நகரத்தார் திருக்கூட்டத்தை நன்கறிந்த
மஹான் ஒருவரால்
திரு. அ. பழ. பழணியப்ப செட்டியார் அவர்கட்கு
எழுதப்பட்ட
**அன்புக் கடிதம்.**

விவேகானந்தர் கல்விக் கழகம்,
ஆவினிப்பட்டி,
தென்னிந்தியா.

# தனவணிகர் முன்னேற்றம்.

அன்பழக,

நன்று; பால்போன்ற உள்ளத்தெழுந்த அன்பலைகளில் அருட்கப்பல் செல்லும். ஆர்வமுடையாரைத் துறை சேர்க்கும் நூல்களை முதலில் படிக்கட்டும். அதனால் ஒரு தெளிவு ஏற்படும். உழு நிலத்தில் விதைப் பிடிக்கும், பிறகு வேண்டியமட்டும் மழை பொழியும். ஆர்வக்கனலிருந்தால் போதும்; மற்றதெல்லாம் ஆங்காங்கிருந்து, உரியபோதில் அவனருள் கூட்டுவிக்கும். அவனருளால்தான் அவனன்புதிப்பது; அவனன்புதித்தால் அவனருள் விளங்கும்; அவனருளே, அவனறிவாகும், அவனறிவாலே அவனின்பாகும், அவனின்பாலே அவனே தானும். நமச்சிவாய என ஆண்டான் அன்பு செய்து, நைந்துருகி, உள்ளுறவுகலந்து, பிறகு சிவோகம் தியானம் செய்து அதன்பிறகு கண்விழித்து நோக்கினால் எல்லாம் சிவமயம் என்பதுண்மையாகும். காதலன் வேறு, காதலி வேறு, காதலிற் கலந்தால் இருவரும் ஒன்றும் காதல் ஒன்று. அதுபோல் அன்பு ஒன்று, அதுவே அவன், இறைவன், அன்பின் தீவிரத்திற்கேற்றபடி அவன் தன்னை விளக்கி ஆட்கொள்வான். அன்பை நம்புக, அன்பு வெல்க!

ரமண விஜயம் அறிவொளி விளக்கத்தை ஊன்றிப் படிக்கவும்.

இது வேண்டுவது உள்ளன்பு ஒன்றுதான். தங்கள் விவேகானந்தர் கழகத்தைப்பற்றிக் கேட்டதுண்டு. அது மிகவும் அரும்பெரும் அருட்பணி. அறிவொளி ஈதலே

அறத்திற்காசு. இப்போது முற்றும் மோனத்தனி யோகத்தில் ஆழ்ந்திருப்பதால் எவரையும் நேரில் காண முடிந்திலது. ஆதலின் அருளாணை பிறக்குமட்டும் கடிதமூலமும், உள்ளுறவிலும் பார்த்துக்கொள்க. அதுவே நலம். அவனருளாணையால், தமிழ் நாட்டில் ஒரு பெரிய அருளியக்கம் உண்டாக்க வேண்டும். அதனால் தமிழும், சமயமும், அறிவும், தொழிலும், கலையும் ஆக்கமுறும். அப்போது அனைவரும் அவனருளில் ஒன்றுபட்டு அவனாணையை இந்த இரத்தக்கலப்புள்ள துணைவரிடையே நிறைவேற்றுவோம். மனிதனின் சிறுமனவகந்தையால் எதுவும் நிறைவேறாது. அவனாணையால் அவனருள்கொண்டு ஆற்றும் பணியே நிலையான பயனைத்தரும்.

1. தமிழர் கூட்டத்தைப் போலவே நகரத்தார் திருக்கூட்டத்தை இது நன்கறியும். இப்போது அதனிடையுள்ள மாசு கால வெள்ளத்தில் கரைந்துபோகும். இன்று தமிழ் உயிரோடிருக்கிறதென்றால் அது நகரத்தாரின் பேருதவியால்தான். தமிழர் நகரத்தாருக்குப் பல வகையில் நன்றிசெய்யக் கடமைப்பட்டுள்ளனர். கடலரசியாக விளங்கி, உலக முழுதும் கப்பலோட்டி, நாட்டில் பொன்னாறு பாய்ச்சிய தமிழரசியின், வாணிபச் சிறப்பையும் இன்று தனவணிகரே தாங்குகின்றனர். வடக்கே சேட்டுகள், தெற்கே செட்டிமார்கள்—இருவரும் பாரததேவியின் செல்வத் திருக்கரங்கள். மீன் குஞ்சு இயல்பாகவே நீஞ்சுவதுபோல், தனவணிகருக்கு இயல்பாகவே வாணிபத்தில் அரிய திறமையுள்ளது. அத்துடன் பல நறுங்குணங்களும் அவர்களிடையே உள்ளன. ஆனால் சில சமூகச் சிக்கல்களால் அத்திறமை இன்னும் விரிந்து பொலிந்து விளங்காமலிருக்கிறது. வட்டித் தொழில் மட்டுமின்றி தனவணிகர் தமிழ் நாட்டு வாணிபத் துறைகள் அனைத்தையும் கைப்பற்ற வேண்டும். திரைகடலோடுவதுடன் தாய்நாட்டி

லும் தங்கள் செல்வக்கொடியை நடவேண்டும். சென்னை தங்கசாலைத் தெருவை நோக்கினால் இன்று தமிழர் பணம் யார் கையில் போய்ச்சேருகிறதெனத் தெரிய வரும். வடாற்காட்டில் மணிலாக்கொட்டை விளைந்தால் வடக்கிருந்து ஒரு சேட்டு அதைக் குத்தகையெடுத்து வெளி நாட்டாருக்கு விற்று லட்சாதிபதியாகிறான். அந்த நிலக்கடலை யந்திரங்களுக்கு எண்ணெயாகிறது. அதன் புண்ணாக்கு, சோப், சவர்க்காரம் ஆகிறது. தமிழ் நாட்டின் மூலப்பொருள்களை (அரிசி, பருத்தி, பருப்பு, கடலை, வாழை, கனி மரங்கள் முதலியவை) தனவணிகர் முனைந்து குத்தகை யெடுக்கவேண்டும். உடனே அவர் களே அவற்றைப் பண்படுத்தித் தொழிலாளிகளைக் கொண்டு பொருளாக்கி விற்கவேண்டும். சிலர் கப்ப லேறி உலகெங்கும் தொழில்புரியலாம். பெரும்பாலோர் உள்நாட்டில் தமிழர் முன்னேற்றத்திற்குத் தொழில் நடத்தவேண்டும்.

பேர் ஊர் அறியாத ஒரு ஐரோப்பியன் ஒரு பெரிய நிலத்தை விலைக்கு வாங்கிக்கொண்டு, கனியும், தேயிலை, காப்பியும் விளைவித்து விளம்பரம் செய்து பெரிய ஊதியம் பெறுகிறான். நிலத்திற்குரிய தமிழன் வறுமையால் வருந்துகிறான். இந்தப் பொருளாதார முன்னேற்றத் தைத் தனவணிகர் கவனித்தால் நல்லது.

2. தனவணிகர் ஏராளமான கோயில் திருப்பணி களும், சத்திரங்களும் நடத்துகின்றனர். இக் கோயில் களிலெல்லாம் தமிழ்ப் பாடசாலை அமைத்து திருமுறை கள், இலக்கண இலக்கியங்களை முறைவர ஓதுவிக்க வேண்டும். புதுமுறையில் கல்வி பயிற்றவேண்டும். கோயில்களில் இன்று இருளும், வௌவால்களும் அடைந்துள்ளன. அங்கே அறிவொளி வீசவேண்டும். கல்வியில் தாராளமாகப் பணம் செலவிடவேண்டும். நமது தமிழன்னையின் குறை நீங்கி உலகின்முன் அவள்

மொழியாகியாகத் தலைநிமிர்ந்து செல்வ நடை நடக்கும் போதுதான் நமக்குத் திருவிழா. அம்மட்டும் தமிழன் தளர்ந்து உறங்காது அருட்பணி புரியவேண்டும். கோயில் திருநாள்களில் ஏராளமாகப் பணம் செலவழி கிறது. தமிழுக்கு அதனால் ஒரு பயனுமின்றிப் போகிறது. ஒவ்வொரு சல்லியும் இனித் தமிழர் முன் னேற்றத்திற்கும் தமிழரின் சுத்த ஸமரஸச் சமய வளர்ச் சிக்கும் செலவாகவேண்டும். உலகெல்லாம் அறிவு, கலை வளர்ச்சிக்குக் கிளர்ச்சிகள் நடக்கின்றன. ஒவ் வொரு நாடும் தத்தனது மொழியை வானளாவ உயர்த்து கிறது. 300 ஆண்டிற்கு முன்பே தலைதூக்கிய வங்க மொழியின் ஒயில் நடையைப் பாருங்கள்! அதுபோலத் தமிழ் முன்னேற வேண்டும். தமிழின் அருமையை, தமிழ்ப் பெரியோர் பெருமையை உலகறிய விளக்க வேண்டும். ஆங்கிலம், ஹிந்தி இரு மொழிகளிலும் தமிழின் பெருமையை விளக்கி நூல்களும் பத்திரிகை களும் வெளிவர வேண்டும். தமிழ் புதுப் புதுத் துறை களில் முன்னேற வேண்டும். பிற மொழிகள் புதுப்புது நயத்துடன் எவ்வளவோ முன்னேறி வருகின்றன. தமிழ் இருந்த இடம் பள்ளமாயிருக்கிறது. புதிய துறை களில் எவ்வளவோ உழைக்கவேண்டிய திருக்கிறது. பழந்தமிழுடன், புதியவுணர்வும், ஏராளமாகத் தற்போ துலகில் மலர்ந்து குலுங்கும் அரிய புது நயங்களும் சேரவேண்டும். அப்போதுதான் தமிழுக்கு உலகில் ஒரு இடமிருக்கும். இன்றேல் வலியிழந்து, ஒதுக் குண்டு நசுங்கிப்போகும். தமிழ் காலத்தை வென்று தனது அருளமுதக் கொடியை நாட்டவேண்டும். இதைச் செய்ய தனவணிகச் சிங்கங்கள் முன்வர வேண்டும்.

3. தனவணிகர் நகைசெய்யச் சலிப்பதில்லை. தலைமுதல் கால்வரை சுமக்க முடியாது. பெண்கள் புதுமை நாட்களில் தங்கக் கட்டிகளைச் சுமக்கின்றனர்.

அத்தனையும் வட்டி நட்டம். அத்தனை பணத்தையும் முதலாக வைத்து ஏதாவது தொழில் நடத்தினால் எவ்வளவு நலம்! தூய ஆடை, ரவிக்கை, கழுத்தில் வேண்டுமானால் ஒரு சங்கிலி, காதில் ஒரு சிறு குழை, (வங்க மாதர் அணிவதுபோல்) கைவளை, இதுபோதும். வங்க நாட்டில் பெரிய சீமான் வீட்டிற்கூட நகைகள் அதிகமில்லை. ஆய்ச்சிமார்களுக்கு இந்த நகை மயக்கையொழிக்கக் கற்பிக்கவேண்டும். அவர்களுக்கு நல்ல முறையில் சுமார் 15 வயதுமட்டும் குருகுலக் கல்வி பயிற்றினால் திருந்துவர். பெண்கல்வி தனவைசியரிடையே தீவிரமாய்ப் பரவவேண்டும். விளக்குப் படங்களைக் கொண்டு—(Magic Lantern)—அவர்களுக்கு சுகாதாரம், சிக்கன வாழ்வு, நாட்டு நடப்பு, புதிய சீர்திருத்தம் முதலியவற்றை விளக்கவேண்டும். நாடகங்கள் இச்சீர்திருத்தத்தை வெகு விரைவில் பரப்பும். தமிழ் நாட்டில் தனித்தமிழ் நாடகக்கலை மன்றம் தோன்றி தமிழ் வேந்தர், திருத்தொண்டர் வாழ்வை நடிக்க வேண்டும்.

4. தனவைசியர் மணம்புரிய வெகு பாடுபடுகின்றனர். ஏராளமாக கன்னிகைக் காணிக்கை செலுத்த வேண்டி யிருக்கிறது. இது நீங்கவேண்டும். காதலிருவர் கருத்துறவைத்து ஆதாவுபட்டதே இன்பம் எனும் கொள்கை பரவவேண்டும். ஒரு ஜாதிக்குள்ளேயே நீண்டகாலம் திருமணச் சடங்குகள் நடந்தால் அச்சாதி வலிவு குன்றும் என்பது அறிஞர் கோள். புதுப்புது இரத்தம் கலக்கவேண்டும், அதுதான் ஐரோப்பிய ஜாதிக்கு உரமளித்தது. ஆதலால் தூய கலப்பு மணம் அவசியம். தங்களுக்கு இசைந்த வேறு வகுப்புப் பெண்களையும் மனப்பொருத்தத்திற் கேற்றபடி மணத்தல் நலமே. ஆனால் களவொழுக்கம் கூடாது; காதல் மணத்தின் பான்மை தர்மஸாதனத்தில் காண்க.

**5.** காதலர் பிரியாது கூடி வாழவேண்டும். இப்போதிருக்கும் நிலைமை மிகவும் பரிதாபமானது. கணவன் மனைவியைத் தனியே விடுத்துத் தொலைக்குச் செல்லுகிறான். மூன்றாண்டுகள் இளமனைவி தாய் வீட்டில் இருக்கவேண்டி யிருக்கிறது. தன்னைக் காதலிக்கும் கணவனைப் பிரிந்து இளம் பெண்டிர் படும்பாடும் அதனால் நேரும் பிசகுகளும், அபாயங்களும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அத்துடன் சிறு பிள்ளைகளையும் தக்க குருகுலங்களுக்கு அனுப்பி கவனமாக வளர்க்க வேண்டும். பிள்ளைகளே இனிவரும் பெரியார். சிறு வயதில்தான் பிள்ளைகளுக்கு உயர்ந்த எண்ணங்கள் பிடிபடும். அவ்வயதில் கவனக்குறைவால் கண்டவரிடம் குழந்தைகளைவிடுத்தால், முன்னேறுவதெப்படி? மைலக் காளைகளையும் முட்டுக்கடாக்களையும் தோட்டப்பயிர்களையும், பணத்தையும் சிலர் கருத்துடன் வளர்க்கின்றனர்; உயிருள்ள புதல்வரை வளர்ப்பதில் கவனம் செலுத்துவதில்லை. அறிவும், ஆற்றலும், கடவுளன்பும், கலையும், தொழிலும் அவர்களுக்கு ஊட்டுக. இளைஞர் கப்பலேறும்போது மனைவி மக்களையும் அழைத்துச் செல்ல வேண்டும். தாங்கள் தொழில் நடத்துமிடங்களில் வீடமைத்துக்கொண்டு முறையாக இல்லறம் நடாத்தி, பிள்ளைகளையும் உயிர்போலப் பேணி, காதலரிருவர் கலந்துறைதல் சாலவும் இன்பமானது. அதனால் மன விகாரம் குறைந்து வீண் செலவுகளின்றி வாழ்வு ஒழுங்காகும். இந்த விஷயத்தில் முன் கட்டுப்பாடுகளை விடுவித்துக்கொள்ள வேண்டும். கட்டும் சட்டமும் மனிதர் நலத்திற்கே. அவை மனிதர்க்காக; அவற்றிற்காக மனிதரல்ல. பெண்டிர் அறிவுக்கல்வி, அருட்கல்வி, அழகுக்கல்வி மூன்றும் பயிலவேண்டும். கொட்டானும் பாயும் பின்னுவது மட்டும் போதாது. நாட்களை வீண் வம்பும், கலகமுமாகக் கழித்துப் பிறந்த வீட்டு நினைப்புடன் புகுந்த வீட்டில் கருத்தின்றியிருத்தல் இனி வேண்டாம். பெண்கள் வீட்டை அழகு செய்க;

நாட்டை அழகு செய்க. கணவர் வாழ்வை இனிமைப் படுத்தும் கலைகள், இசை, ஓவியம் முதலிய பல அழகுக் கலைகள் பயில்க. பெண்கள் மருத்துவம் பயிலலாம். தாராளமான பெண்கல்வி முறையாகத் தரவேண்டும். நாட்டின் ஒரு கை மெலிந்து போகக்கூடாது. ஒரு கண் ஒளி மழுங்கலாகாது.

6. இடம்பட வீடெடுத்தல் மற்றொரு பிழை. செட்டியார் குடும்பம், வீட்டுக்குள் ஒரு மூலையில் இரண்டு அறைகளில் இருக்கும். இதற்காகச் சுமார் 500 பேர் தங்கக்கூடிய வீடு. அதில் பெரும்பாகம் பயனில்லாதிருக்கும். யானை அசைந்து விழுங்கும், வீடு அசையாது விழுங்கும். ஒருவருக்கொருவர் வீடு கட்டுவதில் போட்டி போடுகிறார்கள். அத்தனையும் வீண் பகட்டு, முதற்சேதம். வீட்டைக்கட்டித் தூண்களுக்கு உறைபோட்டு, புதுமை நாட்களில் பளபளவென்று மினுக்குகிறார்கள். வீட்டைப் பார்த்து ஆளை மதிக்கின்றனர். நூறு பேர் வாழக்கூடிய இடத்தில் ஐந்து பேர் உள்ளொற்றுமையின்றி வாழுதல் பொருத்தமல்ல. போதுமட்டும் விசாலமாக வீடெழுப்பி அதைச் சுற்றி நல்ல காற்று பாவும்படி அழகான மலர்ச்செடிகளை வைத்துக் கண்குளிர வளர்க்கவேண்டும். காற்றும் ஒளியும் வீசும்படி வீடுகளில் சாளரங்கள் அமைக்கவேண்டும். இவ்வகையில் ஐரோப்பியரைப் பார்த்துப் பல நற்பழக்கங்களைப் பழக்கிக்கொள்ள வேண்டும். அவர்களுடைய வீடு ஒரு மாசு மறுவின்றிப் பரிசுத்தமாயிருக்கும். மூலை முடுக்குகளில் ஒரு தூசி துப்பட்டையிராது. ஒரு அமைதியும் நிம்மதியும் அதில் நிறைந்திருக்கும். வீட்டின் ஒவ்வோரங்குலமும் களை நிறைந்திருக்கும். புழக்கடைகள் சுத்தமாயிருக்கும். வீட்டுக் கணக்கு நிர்வாகத்தை மனைவி ஒழுங்காகக் கவனிப்பாள். கணவனுக்கு ஒரு நன்மந்திரிபோல் சமயங்களில் நற்புத்தி கூறுவாள். தானும் கணவனுடன் சேர்ந்து குடும்ப காலட்சேபத்

திற்குப் பாடுபடுவாள். வீட்டைச்சுற்றி ஒரு அழகிய தோட்டம் வளர்ப்பர். வீட்டில் அனுவசியமான சாமான்களோ, தேவையற்ற இடமோ இரா. ஒவ்வொரு சாமானையும் பளிங்குபோல் துடைத்து வைத்துக் கொள்வர். ஒரு நிமிஷமும் வீண்போகாது சுறுசுறுப்பாயிருப்பர். மற்ற நடைமுறைகள் எவ்வளவு வேறுபடினும் இவ்விஷயங்களில் ஐரோப்பியரைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். தனவைசியரிடம் பொருளைப் பேணும் கருத்து மிகுதி. ஆனால் தேவைக்கு மேலே, சாமான்களைப் பயனின்றிக் குவித்தல் பணத்தைத் துருப்பிடிக்கச் செய்வதாகும்.

7. தனவைசியர்களால் தமிழ்க் கலைகள் வளர்கின்றன. சங்கீதம், வாத்தியம், நாட்டியம் இவற்றை அவர்கள் ஏராளமான பணஞ்செலவழித்துப் போற்றுகின்றனர். ஆனால் இவற்றால் அளவுக்கு மிஞ்சி வீண் செலவுமாகிறது. ஒரே நாளில் 10000 செலவிட்டுப் பின்னற் கோலாட்டமும், சதுரும் வைத்துத் தீர்ப்பதற்குப் பதில் அத்தொகையைக்கொண்டு கலைமன்றம் ஒன்று கட்டி அங்கு வங்க நாட்டைப்போல இசை, ஓவியம் நுண் தொழில்கள் முதலிய இன்பக் கலைகளைப் பயிற்றலாம். ஒரு புதுமை, திருமணம் என்றால் ஊர் அமளிபடுகிறது. பாடுபட்டுத் தேடிய பணம் பொறி வாணம்போலப் பறக்கிறது. பூரி தட்சணைகள் எத்தனை, புரோகிதர்கள் அமுல்களெத்தனை, அந்தோ மனைவி மக்களை விடுத்துக் கடல் கடந்து வந்து, எவ்வளவு பாடு பட்டுப் பணத்தைச் சேர்க்கின்றனர்; செல்வர் தாங்களும் போதுமட்டும் நுகர்ந்து மனைவி மக்களுக்கும் நல்ல பயிற்சியளித்து, தமிழர் முன்னேற்றத்திற்கும் நல்ல நிலையான வழிகளில் பணம் செலவிட வேண்டும். சிக்கனம் தனவைசியருடன் பிறந்தது. எனில் பெருநாள் திருநாட்களில் பணத்தைச் செலவிடும் போதும் அச் சிக்கனம் வேண்டும். திருமணத்திற்குப் பெண்

ணுக்கோ, பையனுக்கோ ஏராளமான சுல்கம் தருதல் கூடாது. நன்ருக விவரம் தெரிந்த பிறகு இயல்பாகக் காதல் ஏற்பட்டு, மனமொப்பித் தமது விருப்பைப் பெரியோர்களிடம் தெரிவித்துப் பிறகு திருமணம் புரிதலே தமிழரின் தொன்றுதொட்டு வந்த பழக்கம். உறமுறை விட்டுப்போகுமே என்று விவரந் தெரியாத பையனுக்குக் கொம்புபோன்ற பெண்ணைக் கட்டுவது இயற்கைக்கு விரோதமானது. ஆனல் இன்று தமிழ் நாட்டு இளைஞர் வீரமுடன் இப்பழமையான இடர்களை மீறி வருகிருர்கள். ஆண் பெண்ணைவிட 5 வயதாவது மூத்திருக்க வேண்டும். ஏனெனில் பெண் வளர்ச்சி விரைவானது. இருவரும் நல்ல உடல்கட்டும், மன வொருப்பாடும், வாழ்விற்கு ஏற்ற செல்வமும், கல்வியும், ஒழுக்கமும் உடையவராயிருக்க வேண்டும். பெண் ணிற்குச் சுமார் 15 வயதிலும் ஆணுக்குச் சுமார் 22 வயதிலும் திருமணம் நடைபெறவேண்டும். திருமணம் நடைபெறுமுன் பையனை அடிக்கடி வீட்டிற் கழைத்து அவனுடைய நடைமுறைகளைக் கூர்ந்து நோக்கி இரு வருக்கும் மனப் பொருத்தம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சாதகப் பொருத்தத்தைவிட மனப் பொருத்தம் மேலானது. சாதகம் பார்த்து முடிச்சுப் போடுவதால் பல பொய் புனைசுருட்டுகளும், மோசடிக ளும் நடக்கின்றன. பிள்ளைகளைச் சிறு வயதிலேயே பெட்டியடியில் போட்டு மொட்டிலேயே நசுக்கக் கூடாது. ஒவ்வொரு ஊரிலும் ஒரு தக்க குருகுலம்—காங்கிர் குருகுலம் மாதிரி—அமைக்கவேண்டும். அதில் ஆண்களுக்கு ஒரு பகுதி, பெண்களுக்கு ஒரு பகுதி இருக்கவேண்டும். ஏழு வயதானதும் ஆண் பெண் இரு குழந்தைகளையும் அக்குருகுலத்தில் கல்வி கற்க விட்டுவிட வேண்டும். கல்விக்காக மாதம் ரூ. 20 செல விடத்தான் வேண்டும். போதுமட்டும் ஆங்கிலம், ஹிந்தி, பௌதிக சாத்திரம், பூகோளம், ரசாயனம், உடல் நூல் இவ்வை கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ்

நன்கு கற்க வேண்டும். கணக்கும் அவ்வாறே. அத்துடன் இசை, ஓவியம், சிற்பம், வாணிபம், கலைகள், தொழில்கள் பல அவரவர் நோக்கப்படிப் பயிலலாம். ஒரு புதுமை நாள் வந்தால் நாசுக்காக அரிய நண்பருடன் ஒரு விருந்துண்டு, தமிழ் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்து, நல்ல பதிப்பாட்டுகளை முழக்கி, சுமார் 500 ரூபாய்க்கு மேற்போகாமல் செலவிட்டு ரூ. 500 பொதுநலக் கல்விக்குத் தரவேண்டும். மற்ற வீண் ஆடம்பரங்கள் குறைய வேண்டும். தனவைசியர் புதுமைச் செலவுகளைக் கல்விக்காகத் தந்தால் ஊருக்கொரு சாந்திநிகேதனும், காங்கிரி குருகுலமும், கட்டலாம். ஒவ்வோர் ஊரிலும் அருங்கலை மன்றம் அமைக்கலாம். அதில் புலவர்கள் வந்து நாடகம், பாட்டு, கதை, நடனம், ஓவியம், காவியம், சொற்பொழிவுகளை நடத்துவர். அதற்கு ஊரார் மாதம் சுமார் கால் ரூபாய் சந்தாக் கட்டி வரலாம். அது புலவரை ஆதரிக்கும். செல்வர் வீட்டுத் திருநாட்களில் பாட்டு, கதை, சதுர்வைக்க விரும்பினால் கலைமன்றத்தில் ரூ. 100 கட்டி ஏற்பாடு செய்து கொள்ளல் நலம். இது சிக்கனமாகும்.

8. வறுமை, மடமை, அடிமை எனும் மூன்று பேய்கள் நமது தாயின் இரத்தத்தை உறிஞ்சுகின்றன. ஒவ்வொருவனும் தேவையளவு துய்த்து மீதியைப் பொதுநலக் கல்விக்கு ஈந்தால் மடமை யொழியும். நல்ல கல்வியும், கலையும், தொழிலும் ஏராளமாகப் பெருக்கினால் எல்லாருக்கும் உள்நாட்டினாலேயே பிழைப்புக் கிடைத்து, வறுமை நீங்கும். கல்வியும் தொழிலும் முன்னேறினால் ஆயிரம் வகையாக நம்மைச் சூழ்ந்து நமது நலத்தையழிக்கும் அடிமைத்தனங்கள் ஒழியும். மூட நம்பிக்கைகள் அழியும். பணச் செழுமையுள்ள ஒவ்வொருவனும் 10 பேருக்காவது நல்ல கல்வி பயிற்றுவித்தலை மோட்ச சாதனமாகக் கருதவேண்டும். 10 ஏழைகளின் வறுமை நீங்கும்படி தொழில் வளர்த்தலை

உயிர்க்கின்பமாகக் கருதவேண்டும். சுத்த ஸமரஸ ஞானத்தைப் பத்துப் பேருக்கு நன்கு பரப்புவதே ஒரு மதக் கடனாக நினைக்கவேண்டும்.

9. மத விஷயத்தில் நாடு அல்லல்படுகிறது. அனைவருக்கும் பொதுவான இறைவன் பெருமை எங்கும் விளங்கவேண்டும். சீக்கியரின் கிரந்த சாஹெபு போன்று, அருட்பெரியாரின் வாக்குகளை சமரஸ நோக்குடன் கோவை செய்து வெளியிட்டு அதைப் பைபிள் போலப் பரவச்செய்ய வேண்டும். தமிழர் வரலாற்றை நாடகங்களாக எழுதிப் பரப்பவேண்டும். கிருஸ்தவப் பாதிரி ஒரு பைபிளுடன் இந்தியாவிற்கு வருகிறான். பொதுஜனங்களைக் கவரும் வழிகளில் தனது பிரசாரத்தைத் தொடங்குகிறான். ஒரு சிறு கிராமத்தில் ஆதரவு கிடைத்தால், அங்கொரு குடிசை கட்டிக்கொண்டு ஊன்றுகிறான். அக்குடிசை நாளடைவில் ஒரு சர்ச்சாகிறது. அதற்கு நூற்றுக்கணக்கான சீடர் ஏற்படுகின்றனர். அவர்களுக்கு ஒரு பள்ளிக்கூடம், வைத்திய சாலை, அதன்பின் தொழிற்சாலை, அதன் வருவாய் கொண்டு இன்னம் பல காரியங்கள் நடக்கின்றன. கிருஸ்தவப் பிள்ளைகளுக்கு சாப்பாடு போட்டு இனமாக கல்வி பயிற்றும் கலாசாலைகள் கணக்கின்றியுள்ளன. பசுமலை, பாளயங்கோட்டை, தெல்லாக்குளம், மதுரை, தஞ்சை, திருச்சி முதலியவிடங்களிற் சென்று பாருங்கள். அவர்கள் மதத்திற்கும், கல்விக்கும் செய்துள்ள வேலையின் விரிவை! அதுபோலத் தமிழர், தமிழ் முன்னேற்றத்திற்கும், சமய முன்னேற்றத்திற்கும் அல்லும் பகலும் பாடுபட வேண்டும். மேனாட்டுச் சீமான்கள் இவ்வேலைகளுக்கு ஏராளமாகப் பொருளுதவி செய்கின்றனர். தனவைசியர்கள் இவ்விஷயத்தில் கண் விழிக்க வேண்டும். பொருளை எவரிடமும் தரவேண்டாம். தாங்களே நேராகச் செலவிடலாம். இக்காலத்தில் கர்னன் எனத்தகும் ராஜா ஸர். அண்ணாமலை

செட்டியார் அவர்கள், கடியாபட்டியிலும், காரைக்குடியிலும் உயர்தரக் கலாசாலைகள் நிறுவிய பெரியார் போன்ற பல அறநெறிச் செல்வர் தோன்றியுள்ளனர். எனினும் கல்வியியக்கம் ஒவ்வொரு வீட்டிலும் புகுந்து ஒவ்வொரு ஆண் பெண் உள்ளத்தையும்பற்றி உந்த வேண்டும். எண்ணெழுத்துத் தெரியாத எவனும் தமிழ் நாட்டில் இருக்கக்கூடாது. சமயம் வளர வேண்டுமானல் தற்போதுள்ள திருமடங்களெல்லாம் சமயக் கல்லூரிகளாக மாறவேண்டும். கோயில்களிலெல்லாம் குருகுலந் தோன்றவேண்டும். தேசும், ஒழுக்கமும், சிவஞான சித்தியும், அறிவும், அன்பும், தூய வாழ்வும், அருளொளியும் மிக்க சிவச்சுடர்களைத் தயாரிக்க வேண்டும். அவர்களைச் சுற்றி அருட் காந்தம் வீச வேண்டும். அருட்பெரியோர்களே உபதேசம் செய்யத் தக்கவர்கள். ஊருக்கு ஒருவர் அத்தகைய அருளறிவுச் செல்வராக விளங்கி அமைதியாகத் தமது நடைமுறையாலும் தவ வாழ்வாலும் அருளொழுகும் வாக்காலும் மாந்தரை நல்வழியிற் பயிற்றவேண்டும். அவர்கள் தமக்கென எதையும் விரும்பக்கூடாது. அவர்களுக்கு வேண்டிய உடல் தேவையை சமுதாயம் அளிக்கக் கடமைப்பட்டுள்ளது. பயன் கருதாது பணி புரிவதே அவர்கள் இன்பம். அவர்களுக்குத் தனியாகத் தவ நிலையில் வாழ ஒரு ஆசிரமம் தயாரிக்க வேண்டும். அங்கே குறித்த நேரங்களில் குறித்த நாட்களில் எல்லாருக்கும் சமயஞானம் புகட்டப்படும். சிலர் நாடோறும் அங்கு வந்து தியானமும், பாராயணமும் செய்வர்.

மனிதன் நாடோறும் ஒரு மணி நேரமாவது அமைதியாகச் சிவக் கலப்பில், அருளொளி காந்தும் ஒரு குருமூர்த்தியின் முன் வீற்றிருக்க வேண்டும். ஒரு மணி நேரமாவது சமய நூல்களைக் கற்றும் கேட்டும் சிந்திக்க வேண்டும். ஒரு மணி நேரம் உடற்பயிற்சி, உலாவல், நீந்தல், தோட்டப்பயிற்சி முதலியன; 4 மணி

நேரம் கருத்தூன்றிக் கல்விப் பயிற்சி; 5 மணி நேரம் பிழைப்புக்காகத் தொழில்; குளித்தல், துவைத்தல், துய்த்தல் ஒன்றரை மணி நேரம்; உறக்கம் 6 மணி நேரம்; மீதி நேரத்தைத் தனது மனைவி மக்களின் சீர்திருத்தத்திற்காகவும், பொதுநலப் பணிக்காகவும் செலவிடவேண்டும். ஒரு நொடிகூட வீண் போக்கலாகாது. ஏதோ கவலைபற்றி மந்தமாக அலையக் கூடாது. உடல் வில்போல வளையவேண்டும், பந்து போல லேசாயிருக்க வேண்டும். தொந்தியும் தொப்பையும், மலச்சிக்கலும், நீரழிவுமாக மனித வாழ்வு இடர்ப்படக்கூடாது. இள மனைவியை விடுத்து வந்த வாலிபர்கள் தொலை நாடுகளில் ஒரு கட்டின்றி யிருக்கக்கூடும். அதனால் உடல் நலமும், உயிர் நலமும், பொருள் நலமும் கெட்டு வருந்தவும் நேரிடும். அதனால் எங்கிருப்பினும் 22 வயதிற்கு மேற்பட்ட வாலிபர்கள் மனைவியுடன் தர்மஸாதன முறைப்படி இல்லறம் நடத்துதல் சாலவும் நன்று. அது பல தவறுதல்களை மாற்றும். வாழ்விற்கு ஒரு நிலைப்பைத் தரும். வரவு செலவுகளில் ஒரு கருத்தும் கட்டுப்பாடும் தரும். வீட்டு நிர்வாகம் பெண்களிடம் இருக்கவேண்டும். சமயத்தின் பெருமையை வாழ்வி லமைத்துக் காட்டும் அருட்பெரியார்கள் வெளிவந்து கடவுளறிவைப் புகட்டாததே தற்போது எழுந்துள்ள கடவுள் இல்லை என்னும் சூறாவளிக்குக் காரணம். நாத்திகத் தடிப்பு வலுத்து வருவதற்கு நமது சமயத்தின் மீது படர்ந்த போலியாசாரங்களும் வேற்றுமைகளும் தன்னலங்களுமே காரணம். மாசு நீங்கிச் சமய விளக்கை மீண்டும் தூண்டவேண்டும். கேவலம் படிப்பு மட்டும் போதாது. சமய வாழ்வு மக்களுயிரில் ஊறும்படி செய்யவேண்டும். அவ்வுணர்வில் வாழ்வின் ஒரு செயலும் நடைபெற வேண்டும். உண்ணல் உறங்கல் தொழில் புரிதல் எல்லாம் கடவுளுக்கு வழிபாடாக நடக்கவேண்டும். சீவனிற் சிவங் காணவேண்டும். வாழ்வே யோகமாக விரியவேண்டும். உலகெலாம்

கோயில், உயிரெலாம் ஆண்டவன் திருமேனி, ஒவ்வொருவரும் இறைவனுலயத் தொண்டர். கோயில் திருப்பணிக்காகப் பலர் பலவகைத் தொண்டு செய்தும் எல்லாஃ் இறைவன் பணியென்று அமைதியாகச் சண்டை சச்சரவின்றி, வேறுபாடின்றி, ஊறுபாடின்றிச் செய்கின்றனர். அதுபோல உலகாலயத்திலும் அவரவர் தொழிலை இறைவன் வழிபாடாகச் செய்யவேண்டும். அது எத்தொழிலாயினுஞ் சரி. ஒரு தலைவனுக்கடங்கி யந்திரங்களின் பல பாகங்கள் இயங்குவதுபோலவே, மாந்தர் திருவருளுக்கு அடங்கித் தத்தமது நிலையில் தொழில் புரிந்து வாழவேண்டும்.

10. 7 முதல் 18 ஆண்டுமட்டும் தீவிரமான கல்வி—சமயக் கல்வியே கல்வியின் அடிப்படை. அனைவர்க்கும் பொதுவான சமயக் கல்வி தர்மஸாதனத்தில் கூறப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம், இந்தி, சமயநூல், போதுமான மருத்துவம் ஏதாயினும் ஒரு நல்ல தொழிலறிவு இவை ஒவ்வொருவனுக்கும் தெரியவேண்டும். 18 முதல் 20 மட்டும் உடலுரனும், வாழ்வுத் தூய்மையும் அளிக்கத்தகும் யோகப் பயிற்சி. 20 முதல் 22 மட்டும் வாழ்விற்கு வேண்டிய ஏதாயினும் ஒரு தொழிலில் புலமை பெறல். சில வாலிபர் மேனுடு சென்று தொழில் பயின்று வரலாம். 23-ல் தொழில் நடத்தி ஊன்றிக்கொண்டு குடும்பத்தைத் தாங்கும் திறமை வந்ததும் திருமணம் புரியலாம். 24 முதல் 40 மட்டும் முறைப்படி இல்லறம் நடத்தினுல் அறிவும், திருவும், வலிவும் மிகுந்த மைந்தரைப் பெறலாம். 40 வயதிற்குப் பிறகு மேல் 45 மட்டும் குடும்பத்தை ஒழுங்குறுத்தி மனைவி மக்களுக்கு வேண்டிய தேவைகளைச் சேமித்தல், பிள்ளைகளுக்கு நல்ல கல்வி புகட்டல், வயது வந்தவுடன் மணம் முடித்து, அவரவர் தொழிலைக்கொண்டு பிழைக்கும்படி விடுத்தல். பாகபாத்தியத்திற்காக வாய்ச்சிலம்பாடி, வழக்காடிப் பாதி சொத்தைக் கரைக்கின்றனர்.

பொன்னிற்குப் பதிலாக மைந்தருக்குத் தம்மளவில் தொழில் செய்து பிழைக்கும்படியான அறிவும் ஆற்றலும் பயிற்றுவித்தலே பெற்றோருக்கும் பெருமை. வைத்துப்போன சொத்து கட்டித்தந்த சோற்றைப் போலாகும். இஃதானதும் 45 முதல் 50 மட்டும் மனைவியும் தானும் உடன்பிறந்தார்போன்று தூய சிந்தையுடன் பயிலல். 50-க்குப் பிறகு ஒரு தக்க ஞானாசிரியனை யடைந்து இருவரும் சரியை கிரியை யோகம் ஞானம் பெற்று தூய வாழ்வு வாழல்வேண்டும். 60-க்குப் பிறகு எவ்விதமான குடும்பக் கவலையும் பற்றும் இருக்கக்கூடாது. பெற்றோர் பிள்ளைகளைப் போற்றியது போல், பிள்ளைகள் பெற்றோரை முதுமையில் ஆதரிக்க வேண்டும். அக்காலம் முதியோர்கள் தவமும், பொது நலமும் கைக்கொண்டொழுக வேண்டும். இத்தகைய முதியோர் அமைதியாக வாழ முதியோர் மன்றம் நிறுவவேண்டும். வீட்டுக் கவலையெல்லாம் பிறகு மைந்தருக்கு. நன் மைந்தர் பெற்றோரைக் கண் கண்ட தெய்வமாகப் பேண வேண்டும். இது இன்றியமையாத நன்னெறி.

புது யுக வெள்ளம் வருகிறது. மனிதனை அடிமைப்படுத்தும் தட்டு முட்டுகளை அது தகர்த்தெறியும். மனிதன் தனக்குள் விளங்கும் தெய்வத்தை யறிந்து அதனுணர்வில் வாழ்வான். அப்போது எல்லா வுலகிற்கிறைவ னொருவன், எல்லாவுடலும் இறைவனாலயமே என்ற வுணர்ச்சி பொங்கியெழும். வீண் வேற்றுமைகளும், நாத்திகத் தடிப்புகளும் தகர்ந்துபோம். ஆண் பெண் உறவும் ஆன்மவுறவாகும். விலங்குப் பிடிவாதங்களும், பாச வெறிகளும் இரா. வாழ்வெல்லாம் இறைவன் கலப்பில் புரியும் யோகமாகும். சாதி சமய வேறுபாடுகளின்றி தெய்வப் பொதுவில், ஞான நடனத்தரசின் அருள் வெளியில் ஆன்மாக்களெல்லாம் கலந்து அவன் வழிபாட்டாகவே வாழ்வை நடத்துவர். இனி

தெய்வீக மனிதர், அதிமனிதர் (Supermen) தோன்றுவர். இதன்பால்தான் இயற்கை யன்னை மனிதனை நடத்திக்கொண்டிருக்கிறாள். அத்தகைய புது யுக விளக்கம் எமது நூல்களிற் காண்க. இன்புறுக, இன்பத்தைப் பரப்புக ........ இன்பமே இறைவன் ........ சிவன்.

இன்பங்கண் டெல்லார்க்கும் இன்பமே செய்திடுவோம்
அன்பிறைவன் சக்தியருளால்.

குமரன் பவர் பிரஸ், காரைக்குடி—36.